முதன்மை செயலர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், கிண்டி, சென்னை–32 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : முனைவர். ராஜேந்திர குமார், இ.ஆ.ப

செ.மு.எண்: 4022/இபி2/2014 நாள்: 02.04.2018

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – நேரடி நியமனம் –2013–2014 மற்றும் 2014–2015 – தொகுதி IV பணி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர் – தற்காலிக பணித்தெரிவு வரன்முறைபடுத்த ஆணைகள் வழங்குவது – குறித்து.

பார்வை :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 கடித எண் 8861/PSD-B1/2015, நாள் 07.01.2016 மற்றும் 30.09.2016.
2. முதன்மை செயலர் / தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் செ.மு.எண். 4022/இபி2/2014, நாள் 10.11.2016.

------

ஆணை :

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் சுருக்கெழுத்து தட்டச்சராக செல்வி.ஆர். முத்துமாரி, அவர்கள் தற்காலிகமாக ரூ.5200–20200 + தர ஊதியம் 2800 (PB-1) என்ற ஊதிய விகிதத்தில் நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 1–ல் உள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார்.

பார்வை 2–ல் உள்ள இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, செல்வி.ஆர்.முத்துமாரி அவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டதை முன்னிட்டு, பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், ஈரோடு அலுவலகத்தில் 01.02.2017மு.ப சுருக்கெழுத்து தட்டச்சராக பணியேற்றார். இவரின் தற்காலிக பணித்தெரிவு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் வரிசை எண் 3–ல் குறிப்பிட்டுள்ளபடி உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிக்கான பொது விதிகள் விதி 23(a)(i) ன் கீழ்) தனியர் பணியில் சேர்ந்த நாளான **01.02.2017மு.ப முதல் முறையாக வரன்முறை செய்யப்படுகிறது.**

செல்வி.ஆர். முத்துமாரி, சுருக்கெழுத்து தட்டச்சர் அவர்கள் இரண்டு ஆண்டு கால (முறையான பணி) தகுதி காண் பருவம் மூன்றாண்டுகளுக்குள் நிறைவு செய்ய வேண்டும். மேலும், இவர் Department of Technical Education வழங்கும் "Computer on Office Automation" (அலுவலக கணினி தேர்வு) சான்றிதழ் தேர்வுகளில் தகுதிகாண் பருவத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services 2013-2014 recruitment ".

" The seniority of the individuals shall be communicated on receipt of the details of the rotation and turn of the candidates in the department-wise roster by assigning their seniority from TNPSC".

ஒப்/– முனைவர். ராஜேந்திர குமார்,
முதன்மை செயலர் / தொழில் ஆணையர்
மற்றும் தொழில் வணிக இயக்குநர்

3/04/18
முதன்மை செயலர் / தொழில் ஆணையர்
மற்றும் தொழில் வணிக இயக்குநருக்காக
03/04/2018

பெறுநர்

செல்வி.ஆர்.முத்துமாரி,
மாவட்ட தொழில் மையம்,
ஈரோடு. பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் ஈ.ரோடு மேலாக
நகல் : பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் ஈ.ரோடு
நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
நகல் : தகுதிகாண் பருவம் பதிவேடு
நகல் : முதுநிலை பட்டியலுக்காக துவங்கவிருக்கும் புதிய கோப்பு
நகல் : இருப்புக்கோப்பு

Endt. Rc.No. 542/A2/2017, dt 11-04-2018.

Forwarded

11/4/18
GENERAL MANAGER
DISTRICT INDUSTRIES CENTRE
ERODE - 638 001.

11/04/18.

To

Selvi. R Muthamari,
Steno Typist,
DIC, Erode.